செ.வெ.எண்.43 நாள்: 29.04.2020

# பத்திரிக்கைச் செய்தி

## 31.05.2020 வரை விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிட்டங்கிகளில் இலவசமாக சேமிக்கும் வசதி மற்றும் வியாபாரிகளுக்கு சந்தை கட்டணம் ரத்து

அரியலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருட்களை சந்தைக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்வதில் சிரமங்கள் ஏற்படாமல் இருக்க, பெரம்பலூர் விற்பனைக்குழு செயலாளர் (செல்: 8220948166) மற்றும் அரியலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (செல்: 7373877047), ஜெயங்கொண்டம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (செல்: 9865639680) மற்றும் ஆண்டிமடம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (செல்: 8667475472) அவர்களையும் தொடர்புகொண்டு விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விற்பனை செய்து பயன் அடையலாம்.

மேலும் விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காத பட்சத்தில் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிட்டங்கியில் இருப்ப வைத்து 180 நாட்களுக்கு குவிண்டாலுக்கு 10 பைசா வாடகையில் இருப்பு வைக்கலாம். இதில் 31.05.2020 வரை வாடகை தள்ளுபடி உண்டு. மேலும் இருப்பு வைத்த விளைபொருட்களின் அன்றாட சந்தை மதிப்பில் 75% சிறு குறு விவசாயிகளுக்கம் 50% இதர விவசாயிகளுக்கும் அதாவது **ரூபாய் மூன்று இலட்சத்துக்கு மிகாமல் 180 தினங்களுக்கு 5 சதவிகித வட்டியில் பொருளீட்டுக்கடன் பெற்று பயனடையலாம். தற்போது இதில் 31.05.2020 வரை இரத்து செய்யப்பட்டுள்ளது.**

காய்கறிகள் மற்றும் பழங்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக அரியலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் உள்ள குளிர்பதன கிட்டங்கியில் **(25 மெ.டன்) இலவசமாக 31.05.2020 வரை் இருப்பு வைத்து பயனடையலாம்.**

தற்பொழுது நெல் சிறு தானியங்கள், பயறுவகைகள், எள், தேங்காய், பருத்தி, மிளகாய், வெல்லம், முந்திரி உள்ளிட்ட விளைபொருட்களை விவசாயிகள் விற்பனை செய்யும்போது, வியாபாரிகளிடமிருந்து விற்பனை மதிப்பில் 1சதிவிகிதம் சந்தை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. தற்போது நிலவி வரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் விளைபொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஏதுவாக, **தற்போது வியாபாரிகள் செலுத்தும் 1 சதவிகிதம் சந்தை கட்டணம் (Market Fees) எதிர்வரும் 31.05.2020 வரை ரத்து செய்யப்பட்டுள்ளது.**

விவசாயிகள் நலனுக்காக அரசு அறிவித்துள்ள மேற்கண்ட வசதிகளை அனைத்து வேளாண் பெருமக்கள் மற்றம் வியாபாரிகள் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் எவ்வித தடையுமின்றி கிடைத்திட உதவிடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**